தாசில்தார் விசாரணை செய்து மேற்படி விக்கிரங்களை ஜீப்பில் எடுத்துச் சென்று விட்டதாகவும், காணமல் போன 4 கைகள் உள்ள லட்சுமி சிலையும் 9 அங்குலம் உயரம் உள்ள ஒரு சிறிய சிலையும் 1 பாதரட்சையும் சிறுவிளத்தூர் அழகிரிசாமியிடமிருந்து போலீசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்த சிலைகள் அடிக்கடி கண்டெடுக்கப்படுகின்றன. அப்படி கண்டெடுக்கப்படுகின்றபொழுது கிடைக்கின்ற சிலைகளிலே பெண் தெய்வங்களின் சிலைகள் இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் சொன்ன பதிலிலே லட்சுமி சிலை ஒன்றைச் சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிக் கண்டெடுக்கப்படும் சிலைகள் எப்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு காணமல் போயிற்று? அல்லது ஒப்படைப்பதற்கு முன்னால் காணமல் போனதா? அதைக் கண்டுபிடிக்க எத்தனை நாட்கள் ஆனது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, வட்டாட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது காணமற் போக வில்லை. காணமல் போனவற்றை கண்டுபிடித்து ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேன்.

திரு. ரா. மா. முனுசாமி : தலைவரவர்களே, அடிக்கடி தமிழகத்தில் சிலைகள் காணமல் போகின்றன. ஆகவே தொல் பொருள் ஆராய்ச்சி நிலையத்தால் ஒரே நேரத்திலே தமிழ்நாடெங்கும் எந்தெந்த மாவட்டத்தில் சிலைகள் இருக்கின்றன என்று கண்டு பிடிக்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றி முதல்வரவர் களுக்குக் கேள்வி போட வேண்டும்.

தையல் மிஷின்கள் தயாரிப்பு

*312 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் தையல் மிஷின் தயாரிக்கும் தொழிற் சாலை ஒன்றைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் மிகமிகப் பின் தங்கியதாக இருந்துகொண்டு வருகிறது. எனவே இனிமேலாவது இத்தகைய ஒரு தையல் மிஷின் செய்யக்கூடிய சாதாரணத் தொழிற்சாலையையாவது அங்கு நிறுவ அரசுத்துறையில் இல்லாவிட்டாலும் கூட்டுறவுத் துறையிலாவது நிறுவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தையல் மிஷினைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் சென்னையில் ஏற்கனவே இரண்டு தொழிற்சாலைகள் அனுமதி பெற்றிருக்கின்றன.

முகவை மாவட்ட வேலை வாய்ப்பகம்

* 313 வினா—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-ல் முகவை மாவட்ட வேலை வாய்ப்பு நிலையத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 21,515 பேர்.

Closed textile mills in Madurai district.

* 314 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is a proposal to re-open the three closed Textile Mills in Madurai district, namely Raja Mills, Kothandaram Spinning Mills and Murugan Mills; and

(*b*) if so, the steps taken in this regard?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.